# பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர் : வே. வ. இராமசாமி

குரோதி௵ புரட்டாசி மீ அக்டோபர் 1964

வெளியிடுவோர் :

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

தியாகராயநகர் : : சென்னை – 17

விலை : 25 காசு

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பனந்தும்பு—(தலையங்கம்) | ... | 3 |
| 2. | களியாம்பூண்டி பனை ஓலைப் பயிற்சி நிலையம் | ... | 5 |
| 3. | தகணூரவில் பனைத்தொழில் 13-வது பயிற்சி | ... | 9 |
| 4. | தும்புக் கொள்முதல் தரகர்களை ஒழிக்க அதிகாரிகள் முயற்சி | ... | 12 |
| 5. | அதிக வேலை வாய்ப்பு அளிக்கும் பனைத்தொழில் | ... | 13 |
| 6. | தமிழ்நாட்டில் கைக் காகிதத் தொழில் | ... | 15 |
| 7. | கோடைக்கானலில் தேனீ வளர்ப்பு | ... | 17 |
| 8. | சங்கச் செய்தி | ... | 19 |
| 9. | சர்க்கார் சுற்றறிக்கைகள் | ... | 20 |
| 10. | கூட்டுறவு சங்கங்களைத் துவக்குவதற்கான காலக்கெடு | ... | 22 |

## நமது புதிய முதல் அமைச்சர்

திரு. எம். பக்தவத்சலம்

# பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 குரோதிஷூ புரட்டாசிமீ பாளை 12

## பனந்தும்பு

பனைத் தொழில் வல்லுநர்களுக்கு பதநீர் ஓய்ந்த காலங்களில் வேலை கொடுப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதனால் நாம் ஓய்வு நேர வேலை கொடுக்க பல முயற்சிகள் செய்து வருகிறோம். பனந்தும்பு சேகரித்தல், சுத்தம் செய்தல், வியாபாரத்திற்கு லாயக்காக பதப்படுத்துதல் போன்ற காரியங்களை நம் சங்க மெம்பர்கள் பெரும்பாலோர் செய்து வருகின்றனர். சில மாவட்டங்களில் இத்தொழில் பரவலாக செய்யப்பட்டு வந்தது. சென்னை மாநில கதர் போர்டார் கொடுக்கும் தாராளமான பண உதவியால் இவ்வாண்டு தும்பு கொள்முதலை நாம் ஏற்றுக் கொண்டோம்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் மாவட்ட சம்மேளனமும், மாவட்ட சம்மேளனங்கள் இல்லாத மாவட்டங்களில் கிராமக் கைத்தொழில் அதிகாரிகள் உதவியுடனும் மாநில சம்மேளனம் தும்பை கொள்முதல் செய்துவருகிறது. கடந்த 31—8—1964 முடிய சுமார் நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கோரா தும்பை நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். தும்பு கொள்முதல் செய்வதில் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. அவைகளை நீக்குவதற்கு ஆரம்ப சங்க உறுப்பினர்கள் முன்வர வேண்டும்.

(1) ஆரம்ப சங்க மெம்பர்கள் உற்பத்தி செய்யும் தும்பை தங்களுடைய சங்கத்தின் மூலம் மாவட்ட சம்மேளனத்திற்கு கொடுக்கவேண்டும். சந்தைக்குக் கொண்டுவந்தால் தான் மார்க்கட் நிலவரம் தெரியும் என்பது சரியான முறை அல்ல. மார்க்கட் நிலவரத்தை அனுசரித்தே கிராமங்களில் கொள்முதல் செய்ய மாவட்ட சம்மேளனங்கள் ஏற்பாடு செய்கின்றன.

(2) ஈர தும்புகளை தயாரித்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைக் காட்டிலும் தும்பை உலர்த்தி பிரதம சங்கங்களுக்கு கொடுக்கவேண்டும். மெம்பர்கள் அல்லாத தும்பு உற்பத்தியாளர்களை பிரதம சங்கங்கள் அங்கத்தினர்களாக சேர்த்து அவர்கள் மூலம் தும்பு கொள்முதலை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

(3) ஒவ்வொரு பிரதம சங்கங்களிலும் குறைந்தது ஒருதரமாவது சீப்பு போட பழகிக்கொள்ள வேண்டும்.

(4) மாவட்ட சம்மேளனங்கள் தும்பை சுத்தம் செய்யும் நிலையங்கள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்து வருகின்றன. இதை பிரதம சங்கங்களின் அங்கத்தினர்கள் பயன்படுத்திக்கொண்டு தமது மாவட்ட சம்மேளனங்களை ஊக்குவித்து நிரந்தரமான தொழிலை தேடிக்கொள்வதுடன் பணப்பொருள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

(5) ஒவ்வொரு சங்கமும் தாங்கள் உற்பத்திச் செய்யும் எல்லாப் பொருள்களையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமே விற்பனை செய்யவேண்டும் என்ற உறுதிப்பாட்டை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(6) எங்கெங்கு தும்பு பயிற்சி நிலையம் ஆரம்பித்தால் பிரதமச் சங்கங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளுமோ அந்த இடங்களை அந்தந்த மாவட்ட சம்மேளனத்திற்கும், கிராமக் கைத்தொழில் அதிகாரிக்கும் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

**உற்பத்தியைப் பெருக்கி**
**நாட்டை வளப்படுத்துவோம்!**

# களியாம்பூண்டி பனை ஓலைப் பயிற்சி நிலையம்

## வெளி நாட்டாரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது

**செங்கல்பட்டிலிருந்து கிட்டத்தட்ட 20 மைல்கள் தொலைவிலுள்ள களியாம்பூண்டி எனும் மாதிரிக் கிராமத்தில் பனை ஓலைப் பயிற்சி நிலையம் நன்கு இயங்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனை ஓலைப் பொருள்கள் பல வெளி நாட்டவர்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இன்னும் இப்பொருள்களுக்கு மேலை நாடுகளில் கிராக்கி ஏற்பட்டு, ஏற்றுமதியாகி வருகிறது.**

இந்நிலைய வளர்ச்சி பற்றி, பயிற்சி நிலைய போதகர் திரு. ஏ. பாக்கியம் அளிக்கும் ரசமான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

இக்கிராமத்திலுள்ள பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் பனை ஓலைப் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கிவருகிறது. இப்பனையோலைப் பயிற்சி நிலையத்தை திரு. வி. பத்மநாபன், பி.எஸ்ஸி., (கதர்—கிராமக் கைத் தொழில் குழுக் காரியதரிசி) 4—1—1963-ல் திறந்து வைத்தார்கள். மாநில பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனக் காரியதரிசி திரு. சுப்பந்தம், மாநில பனைவெல்ல நிர்மாணிகர் திரு. கதிர்வேலு, திரு. குஞ்சிதபாதம், (கிராமக் கைத்தொழில் அதிகாரி, செங்கற்பட்டு) ஆகியோர் பனை ஓலைப் பயிற்சி ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு, பனை ஓலைத் தொழிலின் அரிய பெரிய நன்மைகளையும், கருத்துக்களையும் எடுத்துரைத்தார்கள்.

### பெண்களின் ஆர்வம்

இப்பயிற்சி நிலையம் 4—1—1963-லிருந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சங்கத்தில் மெம்பர்களாகச் சேர்ந்துள்ள 15 பெண்களுக்கு பனை ஓலைப் போதகர் திரு. பாக்கியம் பயிற்சி அளித்துவருகிறார். 5 பயிற்சியாளர்களுக்கு 4—1—1963-லிருந்து 25—5—1963 முடிய நாளொன்றுக்கு 75 பைசா விதம் ரூ. 445—50 வரை மாநில சம்மேளனத்தாரால் உதவிப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வரும் பெண்களில் பெரும்பாலோர் பிழைப்புக்கு வருமானமில்லாதவர்களாக இருந்தவர்கள். இந்நிலையம் 15 பயிற்சியாளர்களைக் கொண்டு ஆரம்பித்து 20, 25 ஆக உயர்ந்து உள்ளது. மேலும் களியாம்பூண்டியிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் பெரும்பாலான ஆண்களும், பெண்களும் இங்கு வந்து பயிற்சி பெற்றுச் சென்றுள்ளார்கள்.

ஓலைப் பயிற்சி நிலையத்தை பொது மக்கள் பெரிதும் விரும்பி இதனுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள்.

இப்பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

1. சாதா தடுக்குகள்
2. பூத்தடுக்குகள்
3. பாய்கள்
4. கொட்டான்கள்
5. தொப்பிகள்
6. ஆறு மூலைக் கொட்டான்கள்
7. கொத்துக் கிலுக்குகள்
8. பந்துக் கிலுக்குகள்
9. மாதிரிப் பொருட்கள் (நாய், மேஜை, பூனை, நாற்காலி)
10. சர்க்குக் கூடைகள்
11. பூ வாளிகள்
12. கைப் பைகள்
13. மீன் வாய்க் கூடைகள்
14. வால் பிராக்கட்டுகள் (சுவர் அலங்காரப் பொருள்)
15. சதுர, வட்ட விசிறிகள்
16. முடிச்சுத் தடுக்குகள்
17. முல்லை, ரோஜா, நாடா மாலைகள்

ஓய்வு நேர வேலை தருவது ஓலைத் தொழிலே !

18. மேஜைப் பூக்கள்
19. பள்ளிப் பைகள்
20. மணிப் பர்ஸுகள்
21. லேடீஸ் பைகள்
22. வெற்றிலைக் கூடைகள்
23. தாம்பூலத் தட்டுகள்
24. ஜோடனைப் பொருட்கள்
26. டிரங்க் பெட்டிகள்
27. தொட்டில் கூடைகள்
28. ஐந்தறைப் பெட்டிகள்
29. குப்பைக் கூடைகள்
30. அரிசிப் பெட்டி, முறம் முதலியவை.

### ஓலைப் பொருள்கள் விற்பனை

இப்பயிற்சி நிலையத்தில் 5,000-க்கும் அதிகமான பொருட்களைப் பயிற்சியாளர்கள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். களியாம்பூண்டி பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் பயிற்சியாளர்களிடமிருந்து ஓலைச் சாமான்களை விலைக்கு வாங்கி, சுற்றுப்புறச் சந்தைகளிலும், ஊர்களிலும் அவற்றை இலாபத்திற்கு விற்பனை செய்துவருகிறது. பயிற்சியாளர்கள் பயிற்சி முடிந்ததும் சங்கத்தில் ஓலை வாங்கி அவர்களாகவே இவ்வேலையை முழு நேரமும் செய்து பயன் பெறுகிறார்கள்.

சராசரி பயிற்சியாளர்கள் தினம் ஒன்றுக்கு 0—80 காசு வீதம் ஓலைப் பொருட்கள் செய்து சங்கத்தின் மூலம் விற்றுப் பிழைப்பு நடத்துகிறார்கள்.

> கிளைரிசிடியா விரைவில் வளரக்கூடிய பசுந்தாள் உரப் பயிர். தென்னகத்திற்கு உகந்தது. நெற்பயிருக்கு ஏராளமான பசுந்தாள் உரத்தழை கொடுக்கக்கூடியது.
>
> ஆறு வாரம் வளர்ந்த தக்கைப்பூண்டுப் பயிரானது நடவுக்கு இரண்டு வாரம் முன்னர் உழுது புதைக்கப்படுகிறது.

### ஓலைக்குப் போடவேண்டிய சாயம்

மேற்படி பனையோலைப் பொருட்கள் செய்வதற்கு வேண்டிய ஓலை, சாயம் (Leaf & Dyes) முதலியவைகளைச் சங்கம் பயிற்சியாளர்களுக்கு இனாமாகக் கொடுத்து, பனை ஓலைத் தொழிலை மக்கள் பெரிதும் விரும்பி பயில உதவியளிக்கிறது.

களியாம்பூண்டி பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. சுப்பராய ரெட்டியார், திரு. சீனிவாச ரெட்டியார், M.L.A., திரு. ராமகிருஷ்ண ரெட்டியார் (சர்வோதய ஊழியர்) ஆகியோர் பயிற்சி நிலையத்திற்கு வேண்டிய பனை ஓலைகளை அவர்களின் நிலங்களிலுள்ள பனைகளிலிருந்து இனாமாகக் கொடுத்து உதவுகிறார்கள்.

### படக் காட்சிகள் தயாரிப்பு

அகில இந்திய செய்தித்துறை (விளம்பர இலாகா) அதிகாரிகள் இப்பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டு, பயிற்சி நிலையத்தில் நடக்கும் வேலைகளைப் படக்காட்சியாக (Film Show) எடுத்து இந்தியாவிலுள்ள பல்வேறு இடங்களில் சினிமாக் கொட்டகைகளில் செய்தியாகத் திரையிட்டு வருகிறார்கள். மேற்படி பனை ஓலைப் பயிற்சி நிலையத்தில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு உள்ளூரிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் அதிகக் கிராக்கி (Demand) இருப்பதால் மேற்படி பனை ஓலைப் பொருட்கள் தேக்கம் விழாமல் விற்பனையாகிறது.

### வெளி நாட்டவர்களின் பாராட்டு

மேலும், இப்பயிற்சி நிலையத்தை அயல் நாடுகளிலிருந்து பல அதிகாரிகளும், முக்கிய பிரமுகர்களும், மந்திரிகளும் பார்வையிட்டு ஆசி கூறிச் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு இப்பயிற்சி நிலையத்தின் சார்பாக மாலைகள், தொப்பிகள், கைப் பைகள், மாதிரிப் பொருட்கள் (Fancy articles) அன்பளிப்பாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. பனை ஓலைப் பொருட்கள் மேலை நாடுகளுக்கும் சென்று மேலைநாட்டவர்களைக் கவர்ந்துவருகிறது.

பாலைப்போல் சுவைகுன்றாப் பதநீரைப் பருகுவோம்!

களியாம்பூண்டி பனை ஓலைப் பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டுச் சென்ற மந்திரிகள், அதிகாரிகள், முக்கியப் பிரமுகர்களின் பெயர்கள் (பார்வைப் புத்தகத்தில் பொறிக்கப்பட்டவை) கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

| | பெயர்கள் | | பார்வையிட்ட தேதி |
|---|---|---|---|
| 1. | Mrs. Jesssie R. Jeenjigiam ... | America | 13—3—1963 |
| 2. | Mr. R. Palnimuthias, Director of Khadi & Village Industries Commission ... | Bombay | 4—5—1963 |
| 3. | Mr. N. Ramakrishna Iyer, M.P. ... | Delhi | 22—7—1963 |
| 4. | Mrs. Parvatham (Mukkia Sevika) Visited this place with 80 female members, Saidapet ... | Saidapet | 13—9—1963 |
| 5. | Mrs. S. Sarashwathi, Research Officer, A.I.P.P. | Kujarad | 25-12—1963 |
| 6. | Hon. Sri. Boovaragan, Minister for Information & Publicity, Madras ... | | |
| 7. | Mr. Hamud Wryyis, Dept. Stock & Wealth ... | Germany | 18-12—1963 |
| 8. | Mr. H. Srinivasan, Dept. Surgeon, C.L.T.R.I. | Chingleput Hd. Qtrs. | 26—1—1964 |
| 9. | Mr. Yucel Ayash Tusume Irsay, State Planning Organisation, Ankara ... | Turkey | 12—2—1964 |
| 10. | Mr. K. Cunjanraman, B. Elayaperumal, Department of Food & Agriculture, Madras. | | 1—5—1964 |
| 11. | Mr. Chellapandian, Speaker, Madras Legislative Assembly — Madras Govt. ... | | 27—6—1964 |

## மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது

மேலும் ஷெயூர் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பனையோலைப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பள்ளி மாணவ மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இப்பயிற்சி அளிக்க ஷெ பள்ளி தலைமை ஆசிரியர் திரு. இருதயநாதன் ஒரு மணி நேரம் (One Period) ஒதுக்கிக்கொடுத்து மாணவர்களை இப்பயிற்சியில் நாட்டம் கொள்ளும்படி செய்துள்ளார்கள்.

இப்பயிற்சியை நன்கு முழுமையுமாகக் கற்றுக்கொண்ட பயிற்சி நிலையப் பயிற்சியாளர் ஒரு சிலருக்கு சம்மேளனத்துக் காரியதரிசி நற்சான்றிதழ்கள் (Certificates) வழங்கியுள்ளார்கள்.

நற்சான்றிதழ்கள் பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு :—

1. ராமநாதம்மாள்
2. அம்பிகா பரமேஸ்வரி
3. ரேவதியம்மாள்
4. மனோன்மணியம்மாள்
5. குப்பம்மாள்
6. லலிதா
7. ஆதிலக்ஷ்மி

பனையோலைத் தொழில் சிறப்புற்று விளங்க மக்கள் இத்தொழிலின் நன்மைகளை உணரும் வகை செய்தல் வேண்டும். நம் அரசினர் இத்தொழிலை விருத்தி செய்ய ராஜ்யத்தின் பல இடங்களில் பயிற்சி நிலையங்களைப் பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தின்மூலம் பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படுத்தி பயிற்சி அளித்து மக்கள் நன்மை யடையச் செய்துவருகிறது. சம்மேளனத்தின் காரியதரிசி திரு. கே. சம்பந்தம் அவர்கள் பனைத் தொழில்கள் வளர்ந்து செழிக்க அல்லும், பகலும் பாடுபட்டு வருகிறார்கள்.

வளர்க பனைச்செல்வம்! வாழ்க பனைத்தொழில்!!


நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது,
முழு வலிமையுடன் அதைக் காருங்கள். —ஜவாஹர்லால் நேரு

உற்பத்தியை அதிகரித்து, குறைவாக உபயோகியுங்கள்.

அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகளை நாட்டின் பாதுகாப்பிற்கு முதலில் அளிக்க வேண்டும். உற்பத்தியை அதிகரித்து, குறைவாக உபயோகித்து, பாதுகாப்புக்கு பயன்படும்படி செய்ய வேண்டும். இதனால் விலைவாசிகள் உயருவதைத் தடுக்கலாம். படாடோபத்தையும், வீண் செலவையும் தவிருங்கள்.

செலவில் சிக்கனம்
தேச பாதுகாப்பே இக்கணம்

DA 64/F3

# தகனூரவில் பனைத்தொழில் 13-வது மறு பயிற்சி

## சென்னை மாநில கூட்டுறவு சம்மேளன காரியதரிசிக்கு முதற் பரிசு

தகனூரவில் பதிமூன்ருவது பனைவெல்ல வளர்ச்சித் திட்ட அதிகாரிகளுக்காக நடைபெற்ற மறுபயிற்சியில் சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனச் செயலாளர் திரு. கே. சம்பந்தம் அவர்களுக்கு முதற் பரிசு வழங்கப்பட்டது. சென்ற ஆகஸ்ட் மாதம் (1—8—1964) முதல் தேதியில் திரு. தேவாஜி பண்டாரி (பதநீர் இறக்கும் வல்லுநர்) மறு பயிற்சித் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். பல மாநிலங்களிலிருந்து அமைப்பாளர்களும் இதர அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டார்கள்.

அவ்வமயம் சொற்பொழிவு ஆற்றிய பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் இந்த மறுபயிற்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்தினர். இங்கு வந்துள்ள பிரதி நிதிகள், பனைத்தொழில் வல்லுநர் கூட்டுறவு முறையில் கொண்டுவருவதற்கு முன் அவர்களுடைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை மனத்தில் பதியவைக்கவேண்டும். பனைத் தொழில் வளர்ச்சிக்காக கண்டுபிடிக்கப்படும் புதிய விஞ்ஞான நுட்பங்களையும் செயல் முறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். கீழ்க்கண்ட அதிகாரிகள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்கள் :—

| வரிசை எண் | பெயர் | | எந்த மாநிலப் பிரதிநிதி |
|---|---|---|---|
| 1. | திரு. பவானி சிங், அமைப்பாளர். | — | மத்தியப் பிரதேச பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், உஜ்ஜெயின். |
| 2. | திரு. பீமாச்சாரி, செயலாளர். | — | மத்தியப் பிரதேச பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், உஜ்ஜெயின். |
| 3. | திரு. என். மோகந்தி, அமைப்பாளர். | — | ஒரிசா மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், கட்டாக்-2. |
| 4. | திரு. எச். பி. லஹரி, நிர்வாக அதிகாரி, | — | மேற்கு வங்க ராஜ்ய தாட்குட் சில்பீ சம்பய மகா சங்கம் லிமிடெட், கல்கத்தா. |
| 5. | திரு. இராச்குமார் சின்ஹா, முதல்வர். | — | பீகார் மாநில கதர்—கிராமக் கைத்தொழில்கள் குழு, பாட்னு. |
| 6. | திரு. கே. சம்பந்தம், செயலாளர். | — | சென்னை மாநிலக் கதர்—கிராமக் கைத்தொழில் குழு, சென்னை-9. |
| 7. | திரு. என். ஆர். மதாட், அமைப்பாளர். | — | மைசூர் மாநில கதர், கைத்தொழில் குழு, பங்களூர்-4. |
| 8. | திரு. எஸ். பி. இராமமூர்த்தி, அமைப்பாளர். | — | ஆந்திரப் பிரதேச அரசினர், ஹைதராபாத், (தக்காணம்). |
| 9. | திரு. ஆர். ஏ. அவாஸ்தி, ரசாயன ஆராய்ச்சி நிபுணர். | — | பனைப்பொருள்கள் வளர்ச்சி அதிகாரி, தொழில்கள் காரியாலயம், கான்பூர், (உத்திரப் பிரதேசம்). |
| 10. | திரு. ரவீந்திர பிரசாத், பனைப்பொருள்கள் அபிவிருத்தி அதிகாரி. | — | பனைப்பொருள்கள் வளர்ச்சி அதிகாரி, தொழில்கள் காரியாலயம், கான்பூர், உத்திரப் பிரதேசம்). |

*பனையின் உபயோகம் பாமரர்க்குத் தெரியும்!*

—"*PANAI SELVAM*", **October, 1964.**

அடுத்த 12 ஆண்டுகளுக்கு மாதா மாதம் ஒரு 12 ஆண்டு நேஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட் நீங்கள் வாங்குகிறீர்கள். 12 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் ஒரு சர்டிபிகேட் முதிர்வடைந்து, மாதம் ரூ. 175/-ஐ அளிக்கும். வரி இல்லாத இந்த மாத வருமானம் மாதந் தவறாமல் கிடைக்கும் பென்ஷனாகும். வயது முதிர்ந்த காலத்தில் உங்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

# உங்களுக்கு மாதாந்திர பென்ஷன்

சர்டிபிகேட்டுகள் முதிர்வடைந்தவுடன் ரூ. 75/-ஐ வைத்துக் கொண்டு, உங்கள் ஆரம்ப மூலதனமான ரூ./100-ஐ மறுபடியும், நேஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்யலாம். இதனால் உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைகளுக்கோ, புதியதாக முதலீடு செய்த தேதியிலிருந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு தவறாத மாத வருமானம் கிடைக்கும். உங்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் சிறந்த முதலீடு, நேஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட்டுகளில் முதலீடு செய்வதாகும்.

---

## நேஷனல் டிபென்ஸ் சர்டிபிகேட்டுகள் வாங்குங்கள்

---

தேசிய சேமிப்பு நிறுவனம்

| | | | |
|---|---|---|---|
| 11. | திரு. மலிராம்சரம், அமைப்பாளர். | — | இராஜஸ்தான் கதர்—கிராமக் கைத்தொழில்கள் குழு, ஜெய்ப்பூர். |
| 12. | திரு. எப். ஏ. பராப், முதல்வர். | — | மகாராஷ்டிர மாநில கதர்—கிராமக் கைத் தொழில் குழு, பம்பாய்-1. |
| 13. | திரு. சி. எம். தவே, முதல்வர். | — | குஜராத் மாநில கதர்—கிராமக் கைத்தொழில் குழு, ஆமதாபாத்-13. |
| 14. | திரு. கே. ஜி. சைமால், தொழில் நுட்ப மேற்பார்வையாளர். | — | கேரளா மாநில கதர்—கிராமக் கைத்தொழில் குழு, திருவனந்தபுரம். |

மேற்கண்ட புள்ளி விவரத்திலிருந்து இந்தியாவிலுள்ள 14 மாநிலங்களில், 12 மாநிலங்கள் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டன.

பத்து நாட்கள் பயிற்சி நடைபெற்றது. 1964–65-க்குரிய வளர்ச்சி திட்டங்களும் வருங்கால ஆண்டுக்குரிய திட்டங்களும் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. இத்திட்டங்களுக்கான விஞ்ஞான ரீதியான தொழில் நுட்பங்கள், புது முறைகள் சம்பந்தமாகவும் விவரமாக விவாதிக்கப்பட்டு தக்க முடிவுகள் செய்யப்பட்டன. பனைவெல்ல வளர்ச்சி சம்பந்தமான எல்லா அம்சங்கள் பற்றியுள்ள முழு விவரங்களையும் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் வல்லுநர்கள் எடுத்துரைத்தார்கள். பனைத்தொழில் வளர்ச்சி குறித்து தங்கள் மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட விஷயங்களையும், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளையும் மாநில அதிகாரிகளும், செயலாளர்களும் எடுத்துக் கூறினர். பாடபோதனைகளையும், செயல்முறை வகுப்புகளையும் அவர்கள் மிக்க அக்கறையுடன் கவனித்து வந்தார்கள்.

## முடிவுரை

சென்ற ஆகஸ்ட் மாதம் 10-ந் தேதி மாலையில் மறுபயிற்சி வகுப்பு முடிவடைந்தது. தாணு மாவட்ட ஜில்லாப் பரீஷத் நிதிக் கமிட்டியின் தலைவர் திரு. தக்கோர்பட் ஷாவின் தலைமையின் கீழ் இவ்விழா நடைபெற்றது. இங்கு கிடைத்த தொழில் நுட்ப அறிவை தங்கள் தங்கள் மாநிலங்களில் அமைப்பாளர்களும், செயலாளர்களும் செயல்முறையில் பயன்படுத்த வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். திட்டங்களை நிறைவேற்றும்பொழுது வல்லுநர்களின் சேமநலனே அவர்களுடைய தலையாய நோக்கமாகக் கொள்ளவேண்டுமென்றார் அவர்.

இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, எல்லாத் துறைகளிலும் அக்கறை காட்டியவர்களுக்கு 2 பரிசுகள் வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | — | திரு. கே. சம்பந்தம், செயலாளர், சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், சென்னை-17. |
| இரண்டாவது பரிசு | — | திரு. பவானி சிங், செயலாளர், அகில பாரத தாட்குட் சககாரி சங் லிமிடெட், உஞ்ஜெயின் (ம. பி.) |

இரவு 7 மணிக்கு தேசிய இசை "ஜன கன மன" பாடப்பெற்றபின் மாநாடு இனிது முடிவுற்றது.

**பனிரெண்டு கோடி பனைகள் இந்தியாவின் இயற்கைச் செல்வம்**

# பனந்தும்பு கொள்முதல் தரகர்களை ஒழிக்க அதிகாரிகள் முயற்சி

சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன இயக்குநர் திரு. வி. பி. ஆர். சிதம்பரம் மதுரை மாவட்ட கிராமக் கைத் தொழில் அதிகாரி, சென்னை மாநில பனை வெல்ல வியாபார நிர்வாகி ஆகியவர்களின் முன்னிலையில் திண்டுக்கல் வட்டாரத்திலுள்ள ஐந்து (5) பனைவெல்ல உற்பத்தி பிரதம சங்கங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளின் கூட்டம் 3—8—1964-ம் தேதி பிற்பகல் 2 மணிக்கு தொடங்கியது. பனைத் தொழில் அபி விருத்தி சம்பந்தமாக சகல பிரச்சினைகளையும் தீவிரமாக ஆலோசித்து விசேஷமாக தும்பு உற் பத்தி கொள்முதல் பிரச்சினைகள் ஆராயப்பட்டு குறிக்கோள் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டன்.

உயர்திரு. வி. பி. ஆர். சிதம்பரம் அவர்கள் இவ்வட்டாரத்தில் நடத்திவரும் தும்பு கொள் முதல் முறைகளை விவரமாக பிரதிநிதிகள் வாயிலாகக் கேட்டறிந்தபின்பு, தும்பு கொள் முதல் செய்வதற்கு தற்போது கையாண்டு வரும் தரகர் மூலம் கொள்முதல் செய்வதும், தற்போது தும்பு நிறுவை செய்யாமல் உத்தேசமாக வாங்குவதும், இதனால் தும்பு உற்பத்தியாளர்களுக்கு பலவகையிலும் நஷ்டம் ஏற்படுவதை விபரமாக எடுத்துச் சொல்லி குறிப்பாக சங்கத்தார்கள் தும்பை நிறுவை அளவு மூலமாக நிறுத்துத்தான் கொள்முதல் செய்யவேண்டும் என்று அழுத்த மாக சொன்னதின் பேரில் மெம்பர்களிடம் தாங்களே நிறுவை மூலம் நிறுத்து இன்னும் ஒருமாத காலத்திற்குள் மேற்குறிப்பிடப்பட்ட பழைய வியாபார முறையை ஒழித்துக்கட்டுவ தாகவும் உறுதியளித்திருக்கிறார்கள். பிரதம சங்கங்கள் முதல் மாநில சம்மேளனம் வரை கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை, பனை வடலிகளை பிரதம சங்கங்கள் குத்தகைக்கு வாங்குதல் உற்பத்தி இடத்திலேயே முதல் சீப்பும் இரண்டாவது சீப்பும் போடுதல், கடன் வசதிகள்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார் கள். இதன் விவரப்படி தொழிலாளிகளுக்கு தற்போது கிடைத்துவரும் வருமானத் திலிருந்து கூடுதலாக ரூபாய் 1-க்கு 25 பைசா வரை கிடைக்கும் வழியை விவரமாக எடுத்துச் சொன்னார்கள். இடைத்தரகர்களால் தொழி லாளிகளுக்கு ஏற்படும் நஷ்டங்களையும், அதனை பிரதம சங்கங்களால்தான் ஒழிக்க முடியும் என்ற முறையையும் விளக்கமாக எடுத்துக்கூறி அதற்காக பிரதம சங்க பிரதி நிதிகள் யாவரும் உண்மையாகவும் தீவிர மாகவும் வேலை செய்யும்படி வந்திருந்த பிரதி நிதிகளிடம் மெம்பர் கேட்டுக்கொண்டார்.

### வியாபார நிர்வாகி

சென்னை மாநில பனைவெல்ல சம்மேளன வியாபார நிர்வாகி அவர்கள் தும்பு கொள் முதலுக்கு வேண்டிய பண உதவிகளை அவ்வப் போது தீர்த்து வைக்கவேண்டிய ஏற்பாடுகளை தாம் கவனித்துக்கொள்வதாக வாக்களித் தார்கள். மேலும் பிரதம சங்கங்களுக்கு கொள்முதல் அட்வான்சாக தற்காலிகமாக ரூபாய் 500 வீதம் கீழ்க்கண்ட ஒவ்வொரு சங்கங்களுக்கும் உடன் கொடுத்துதவி நல்ல முறையில் செய்யும்படியாக கேட்டுக் கொண்டார்கள்.

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1. | கோவிலூர் | ப. கூ. உ. சங்கம் ... | 500 |
| 2. | களத்தூர் | ,, ... | 500 |
| 3. | ஆர். கோம்பை | ,, ... | 500 |
| 4. | பழைய தோப்பு | ,, ... | 500 |
| 5. | ஒட்டன்சத்திரம் | ,, ... | 500 |

மதுரை மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி அவர்கள் மேற்படி தும்பு கொள் முதல் வெற்றிகரமாக செய்வதற்காக தனது ஊழியர்களைக்கொண்டு சகல உதவிகளையும் செய்வதாக வாக்களித்தார்கள். மேலும் தொழிலாளர்களுக்கே நேரடியாக நல்ல விலை கிடைக்க பிரதம சங்கங்கள் பாடுபட வேண்டு மென்றும் எடுத்துச் சொன்னார்கள்.

*(ஒப்பம்) எம். இராமசுப்பு,*
*கிராமக் கைத்தொழில் அதிகாரி.*

சித்தர் மருத்துவத்தில் முதலிடம் வகிப்பது பனங்கற்கண்டு!

# அதிக வேலை வாய்ப்பு அளிக்கும் பனைத் தொழில்

தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரி சின்னஞ்சிறு மாவட்டமாக இருந்தபோதிலும் இது இயற்கை எழில்வளம் கொண்ட பாரதத்தாயின் பாதம்போல் விளங்குகிறது. 643 சதுர மைல் பரப்பளவுள்ள (1,665 சதுர கிலோமீட்டர்) கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுகாக்களைக் கொண்டது. இங்கு சதுர மைலுக்கு சராசரி 1,550 பேர் வீதம் 9,96,915 பேர் வாழ்கின்றனர்.

கீழ்க்கண்ட அட்டவணை மூலம் இம்மாவட்டத்தில் பலதரப்பட்ட கிராமக் கைத்தொழில் வளர்ச்சியுற்று வருவதை அறியலாம்.

| | கிராமக் கைத்தொழிலின் பெயர் | | தக்கலை, திருவட்டாறு நீங்கலாக 1963-ம் ஆண்டு தோராயக் கணக்குப்படி தொழிலில் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தச்சுவேலை | — | 2,773 |
| 2. | கொல்வேலை | — | 1,331 |
| 3. | பனையேற்றுத் தொழில் | — | 1,055 |
| 4. | கயிறு திரித்தல் | — | 2,263 |
| 5. | எண்ணெய் உற்பத்தித் தொழில் | — | 1,223 |
| 6. | மட்பாண்டத் தொழில் | — | 1,025 |
| 7. | தேனீ வளர்ப்பு | — | 2,266 |
| 8. | சுண்ணாம்பு செய்தல் | — | 708 |
| 9. | கைக்குத்தல் அரிசி | — | 653 |
| 10. | பாய் நெசவு | — | 6,843 |
| 11. | பனந்தும்பு | — | 6,559 |
| 12. | ஜரிகை — சித்திரத் தையல் வேலை | — | 2,051 |
| 13. | பனையோலைக் கூடை முடையும் தொழில் | — | 1,383 |
| 14. | கத்தாளை நார்த் தொழில் | — | 892 |
| 15. | பனைவெல்லம் செய்தல் | — | 10,918 |
| 16. | செங்கல் | — | 696 |
| 17. | நூற்பு | — | 6,460 |
| | மொத்தம் | — | 49,099 |

மேலேகண்ட புள்ளி விவரத்திலிருந்து கிராமக் கைத்தொழில்களுள் பனைத் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருப்போரின் எண்ணிக்கை 18,532 ஆகும். இது மொத்தத்தில் 38% ஆகிறது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைத் தொழில் சிறந்த கிராமக் கைத் தொழிலாக நடைபெற்று வருவதோடு அதிக வேலை வாய்ப்பளிக்கும் தொழிலாகவும் விளங்குகிறது.

—ஆசிரியர்.

குறிப்பு :— இதில் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள் ஆகஸ்டு மாத 'சென்னைச் செய்தி' என்ற ஆங்கில வெளியீட்டிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

இனிய உளவாக இன்னாத கூறல்—கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

# "பனைச் செல்வம்"

(ஆசிரியர்: வே. வ. இராமசாமி)

★

★ மாநில சம்மேளனத்தின் ஒப்பற்ற மாத வெளியீடு!

★ பனைத்தொழில் நுணுக்க விளக்கங்களையும், செய்திகளையும் சுவைபடத் தரும் ஒரே ஒரு தமிழ் ஏடு!

★ கட்டுரைகள், கவிதைகள், ஆராய்ச்சிக் குறிப்புக்கள், முதலியவற்றைத் தித்திக்கும் தேன் தமிழில் திகட்டாமல் படைக்கிறோம்! படித்துப் பயன் பெறுவீர்!

★ ஐயங்களைக் கேட்கலாம்; அனுபவங்களை எழுதி அனுப்பலாம். எல்லாக் கிராமக் கைத்தொழில் கட்டுரைகளும் வரவேற்கப்படுகின்றன.

**ஆண்டுச் சந்தா ரூ. 3/-**

*உங்கள் பிரதியை ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே புத்தக நிலையங்களிலும் கேட்டு வாங்குங்கள்.*

**தனிப் பிரதி 25 காசு**

*வெளியிடுவோர்:*

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்,

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை,

தியாகராயநகர் :: சென்னை - 17.

தந்தி: பதநீர் போன்: 42755

# தமிழ்நாட்டில் கைக்காகிதத் தொழில்

### பிடாகம்
### (தென்னாற்காடு மாவட்டம்)

அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட கிராமக் கைத்தொழில்களில் காகிதத் தொழிலும் ஒன்ருகும். தமிழ் நாட்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிடாகம் என்ற கிராமத்தில் கையினுல் காகிதம் செய்யப்பட்டு வருகிறது. இத்தொழில் மாநிலக் கதர் கிராமக் கைத்தொழில்கள் குழுவின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. புது கருவிகளை உபயோகித்து இக்காகிதத் தொழிலை மேம்பாடு அடைய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தொழில் 1962-ல தொடங்கப்பட்டது.

இங்கு எழுதுவதற்கான காகிதம், காகித அட்டைகள், மெனிபோல்டிங் பேப்பர், போன்ற உயர் ரகக் காகிதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கு இம்மாதிரி காகிதம் விற்கப்படவில்லை. இருந்தபோதிலும், சர்க்கார் இலாக்காக்களே இங்கு உற்பத்தியாகும் காகிதங்களை வாங்கிக் கொள்கின்றன.

இங்கு வேலை செய்துவரும் தொழில் நிலையத்தின் நிர்வாகம் தற்சமயம் கோலியனூர் பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பஞ்சாயத்துகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் முறையில் ஏற்பட்ட ஏற்பாடு ஆகும் இது.

படம் வரையும் காகிதம், 'பாண்ட்' காகிதம் போன்ற உயர்தர காகிதங்களை உற்பத்தி செய்ய இந்த நிலையம் முனைந்து வருகிறது. இவ்விடத்தில் விரைவில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமான காகிதங்கள் உற்பத்தி செய்வதில் கஷ்டம் இராது.

* * *

### கண்ணஞ்சேரி
### (கன்னியாகுமரி மாவட்டம்)

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹரிஜனங்கள், கையால் செய்யும் காகிதத் தொழிலை நன்கு நடத்தி வருகின்றனர். கண்ணஞ்சேரி கையால் செய்த காகிதம், காகித அட்டை உற்பத்தி தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டு இத்தொழிலை நடத்திக்கொண்டு வருகின்றனர். சென்னை அரசாங்கமும் 1959-ம் ஆண்டில் ரூ. 46,000 மானியமாக வழங்கி உள்ளனர்.

---

### ஆள் இல்லாமல் தானே உழும் கலப்பை!

ஆள் உதவியில்லாமல் தானே இயங்கக் கூடிய நூதனமான இயந்திரக் கலப்பை ஒன்றை மூனிச்சிலுள்ள "எய்ச்சர் டிராக்டோரென்வர்க்" என்ற தொழிற்சாலை கண்டுபிடித்திருக்கிறது. ஒரு ராட்சஸப் பூச்சி மாதிரி தோற்றமளிக்கும் இதற்கு "அக்ரி ரோபட்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. வயலின் கோடி வந்துவிட்டால், அது தானே நின்று திரும்பி பின்னர் உழ ஆரம்பிக்கிறது. வயல் முழுவதும் உழுது முடியும் வரை இது வேலை செய்துகொண்டே இருக்கும். முதலில் உழும் வேலையைத் துவக்கிவிட ஆட்கள் வேண்டும். அதன் பின் ஆட்கள் தேவையில்லை. ஏதாவது இயந்திரக் கோளாறு இருந்தால் இந்தக் கலப்பை வேலை செய்வது தானே நின்று விடும். இதனுல் ஆபத்துகள் எதுவும் ஏற்பட இடமே இல்லை. உழுவதில் ஏற்படக் கூடிய சில தவறுகளையும் இந்தக் கலப்பை தானே சீர் செய்யக்கூடியதாம்.

---

 பதநீரும் வெல்லமும் நோயை நீக்கி உடலை வளர்க்கும்

இனாமாக வழங்கப்பட்ட 2½ சென்ட் நிலத்தில் ஒரு தொழிற்சாலையை அவர்கள் நிறுவினார்கள். இதற்குத் தேவையான இயந்திர சாதனங்களும் வாங்கி நிறுவப் பட்டன.

இச்சங்கத்தில் மொத்தம் 62 உறுப்பினர்கள் உளர். பங்கு மூலதனம் ரூ 481 நாள் ஒன்றுக்கு இத்தொழிற்சாலையில் 17 பேர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறது. எழுதும் காகிதம், காகித அட்டை, பைல்கள், மேஜையில் வைத்து எழுதுவதற்குரிய அட்டைகள், இன்னும் இதர ரகக் காகிதங்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசாங்கத்தின் பல இலாகாக்களுக்கு காகிதம், காகித அட்டைகள், பைல்கள் முதலியன சப்ளை செய்யப்படுகின்றன.

மற்றொரு தொழிற்கூடமும் அமைக்க சென்னை மாநில கதர், கிராமக் கைத்தொழில் குழு ரூ. 38,000 அனுமதி அளித்துள்ளது. கட்டிடமும் விரைவில் கட்டிமுடிக்க ஏற்பாடாகி வருகிறது.

அரசாங்கம், மாநில கதர், கிராமக் கைத்தொழில் 'குழு' கதர் கமிஷன் ஆகியன இச்சங்கத்திற்கு மான்யமாக ரூ. 68,980-ம்; கடனாக ரூ. 30,500-ம் வழங்கி உள்ளன.

உற்பத்தி, விற்பனைபற்றிய விவரம் கீழே தரப்படுகிறது:

| வருஷம் | உற்பத்தி ரூ. | விற்பனை ரூ. | ஊதியம் ரூ. | லாபம் அல்லது நஷ்டம் ரூ. |
|---|---|---|---|---|
| 1961—62 ... | 3,764 | 111 | 1,527 | (−) 361 |
| 1962—63 ... | 15,678 | 13,041 | 4,352 | (+) 1,265 |
| 1—4—'63 முதல் 29—2—'64 வரை ... | 21,254 | 15,050 | 5,265 | (+) 2,170 |

இங்கு இக்காகிதத் தொழிலை வளம்பெறச் செய்வதற்கான நல்ல வாய்ப்பு இருக்கிறது. இச்சங்கம் நல்லதரமான காகிதத்தை உற்பத்தி செய்து வழிகாட்டியுள்ளது. இதன்மூலம் இச்சங்கம் அதன் உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் தொடர்ந்து நல்ல சேவை செய்துவரும் என்பதில் ஐயமில்லை

குழந்தைகள் நலனுக்குச்
சிறந்தது பனங்கற்கண்டு

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து

# கோடைக்கானலில் தேனீ வளர்ப்பு

தாண்டிக்குடியில் சென்ற சில ஆண்டுகளாகக் கோடை தேனீ வளர்ப்பவர்கள் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம் நன்கு செயல்பட்டு வருகின்றது. 8—11—1954-ல் 90 உறுப்பினர்களுடன் இதன் வேலை தொடங்கியது. பங்கு முதலீடு ரூ. 1,385-ஆக இருந்தது. இன்று மொத்தம் 137 உறுப்பினர்கள் உளர்; பங்கு முதலீட்டுத் தொகை ரூ. 1635-ஆக உயர்ந்துள்ளது. மதுரை கூட்டுறவு மத்திய பாங்கியில் ரூ. 5,299 முதலீடு செய்துள்ளது.

இதுவரை இச்சங்கம் ரூ. 29,000 கடன் வாங்கியுள்ளது. நிர்வாகச் செலவு, விளம்பரத்துக்குத் தேவையான கருவிகள் வாங்கவும் ரூ. 10,660 வரை மானியமாகப் பெற்றிருக்கிறது.

## சென்ற 5 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பற்றிய விவரம்

| ஆண்டு | உறுப்பினர் எண்ணிக்கை | அளிக்கப் பட்ட பங்கு முதலீடு | உற்பத்தி | | விற்பனை | | இலாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ராத்தல் | விலை மதிப்பு ரூ | ராத்தல் | விலை மதிப்பு ரூ | ரூ. |
| 1959—60 ... | 130 | 1,615 | 7,164 | 7,164 | 9,670 | 18,726 | 996 |
| 1960—61 ... | 130 | 1,615 | 7,893 | 8,142 | 6,104 | 11,975 | 1,900 |
| 1961—62 ... | 130 | 1,615 | 10,276 | 14,795 | 10,381 | 23,361 | 1,700 |
| 1962—63 ... | 133 | 1,615 | 7,002 கி.கிராம் | 24,507 | 7,647 கி.கிராம் | 35,775 | 664 |
| 1963—64 ... | 133 | 1,635 | 7,518 கி.கிராம் | 26,314 | 6,626 கி.கிராம் | 35,172 | 2,139 |

### நிர்வாகம்

தேனீ வளர்ப்பில் மிகவும் ஊக்கமும், அக்கறையும் கொண்ட 9 டைரக்டர்கள் அடங்கிய குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதியில் பெயர்பெற்ற தோட்டக்காரர் திரு. ஜி. பக்கிரிசாமி பிள்ளை இந்த சங்கத்தின் தலைவராவார். இத்தொழிலில் அவர் மிக்க அக்கறை உள்ளவர். திரு. எம். அழகிரிசாமி, பி.ஏ., எம்.எல்.ஏ., காரியதரிசி. இவர் சென்னை மாநிலக் கதர், கைத்தொழில்கள் குழுவில் ஓர் உறுப்பினர். இந்தச் சங்கத்தின் வளர்ச்சிக்கு மூலகர்த்தா ஆவார். ரூ. 10,000 செலவில் தேன் இல்லம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மானியமாக ரூ. 5,000-மும், கடனாக ரூ. 5,000-மும் வழங்க சென்னை மாநிலக் கதர் கிராமக் கைத்தொழில்கள் குழு அனுமதி அளித்துள்ளது.

இன்றும் தேனீ வளர்ப்பை கூட்டுறவு முறையில் மேம்பாடு அடையச்செய்ய முயன்று கொண்டிருக்கிறது இந்தச் சங்கம்.

**பண்டைய நாளில் பனையோலையில் எழுதி வாசித்தனர்!**

# புற்றுநோய்க் கிருமியை அடியோடு ஒழிக்கப் புதுமுறை

## ஜெர்மன் நிபுணரின் சாதனை

**புற்றுநோய் ஏற்படுவதற்கான உயிர் அணுக்களை அடியோடு ஒழித்துகட்டுவதற்கான வழியை ஜெர்மன் ஆராய்ச்சியாளர் ஹான்ஸ் லெட்ரே தனது ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடித்திருக்கிறார். ஆனால் இந்தப் புது கண்டுபிடிப்பினால் மட்டுமே புற்றுநோயை ஒழித்துக்கட்ட வழி ஏற்பட்டுவிட்டது என்று நினைத்துவிட முடியாதென்றும் அவர் எச்சரித்திருக்கிறார். ஆனால் புற்றுநோய் ஒழிப்பு பிரச்னையில் இக்கண்டுபிடிப்பு பெரும் அளவுக்கு உதவும் என்பதை மறுப்பதற்கில்லை.**

உலகில் புற்றுநோயை அடியோடு ஒழித்துக்கட்டுவதற்கான மும்முரமான முயற்சிகளில் விஞ்ஞானிகளும் வைத்திய நிபுணர்களும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். எனினும், புற்றுநோய் ஏற்படுவதற்கான அடிப்படையான காரணம் எது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. புற்றுநோய் ஏற்படுவதற்குக் காரணமாகவுள்ள உயிர் அணுக்கள் பற்றிய விவரங்கள் தெரியவந்தால் இப்பிரச்சினை தீர்ந்துவிடும்.

ஜெர்மன் ஆராய்ச்சியாளரான ஹான்ஸ் லெட்ரே புற்றுநோய் உயிர் அணுக்களின் தன்மை என்ன என்பதை ஹீடல்பர்க் பல்கலைக்கழக ஆய்வுச்சாலையில் பரிசோதனைகள் நடத்திக் கண்டுபிடித்திருக்கிறார்.

'பியூரிலிஹிஸ்டமைன்' என்ற மருந்து ஆரோக்கியமுள்ள உயிர் அணுக்களிடமும், புற்றுநோய் உயிர் அணுக்களிடமும் எப்படி வேலை செய்கிறது என்பதையும் ஆராய்ந்தறிந்திருக்கிறார். சாதாரண உயிர் அணு இந்த மருந்தை ஆகர்ஷிப்பதேயில்லை. ஆனால், அதன் மேல்புறத்திலுள்ள "என்ஸைம்" என்ற பொருள் இந்த மருந்தை அணு அணுவாக மாற்றி உள்புறம் இழுக்கிறது என்பதையும் இவர் அறிந்தார்.

இந்த மருந்தைப் புற்றுநோய் உயிர் அணுக்கள் கவர்ந்துகொண்டதும் அந்த அணுக்கள் செயலற்று மடிந்துவிடுகின்றன. ஆனால் புற்றுநோய் உயிர் அணுக்களின் மேல் பரப்பில் "என்ஸைம்" இல்லை.

இப்புதுக் கண்டுபிடிப்பினைக்கொண்டு புற்றுநோயை அடியோடு ஒழித்துவிட முடியும் என்று வீண் கனவு காணக்கூடாதென்றும் ஆனால் இக்கண்டுபிடிப்பு இத்துறையில் பெரும் அளவு உதவலாம் என்றும் லெட்ரே கூறுகிறார்.

---

### கரிப்புகையைக் கட்டுப்படுத்த "டெலிவிஷன்" சாதனம்

டஸ்ஸல்டார்ப் (டாட்)—புகை அதிகமாக வெளிப்படும் ரைன்-ரூர் பிரதேசத்தில் புகை வெளிவருவதை உடனே கண்டறிந்து அவைகளை கிரகிக்கச் செய்ய டெலிவிஷன் காமிராக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்புகை பெரும் தொல்லை கொடுப்பதுடன் சுகாதாரத்திற்கும் கெடுதலாக இருந்து வருகிறது.

வருடத்தில் 75,000 ரயில்வே வாகன்களில் ஏற்றிச் செல்லக்கூடிய கரிப்பொடிகள் 5,000 சதுர கிலோமீட்டர் பிரதேசத்தில் வசிக்கும் 80 லட்சம் பேர்மீது படிகிறது. ஆகவே இந்த ஆபத்தைத் தவிர்க்க ஏராளமான கரிப்பொடி வடிகட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இதை அமைக்க அதிகம் செலவாகிறது. டெலிவிஷன் மூலம் பார்த்து அதிகப் புகை வெளிப்படுவதை உணர்ந்து அதைத் தடுக்க வழி செய்யப்படுகிறது.

---

# சங்கச் செய்தி

## நாலுமேதபதி பனைவெல்ல உற்பத்தி சங்கம்

### ஜூன் மாதத்தில் கருப்பட்டி உற்பத்தி விபரம்

| | கிலோ | ரூ. பை |
|---|---|---|
| மெம்பர்கள் உற்பத்தி செய்த பனைவெல்லத்தின் எடையும் விலையும் ... | 1,706 | 1,188-94 |
| லைசன்ஸ் மொத்தம் 16 | | |
| விற்ற வெல்லத்தின் எடையும் விற்ற விலையும் ... | 1,706 | 1,188-94 |
| மெம்பர்களுக்கு பட்டுவாடா செய்த தொகை ... | | 1,152-35 |
| இருப்பு | | ... |
| சங்கத்திற்கு வரவு வந்த மொத்த கமிஷன் ... | | 36-59 |

6—7—1964. அ. அருளானந்தசாமி,
தலைவர்.

* * *

## ரெட்டையூரணி கருப்பட்டி உற்பத்தி சங்கம்

### நேருஜிக்கு இரங்கல்

நமது இந்தியப் பிரதமர் நேருஜி அவர்கள் அமரத்துவம் அடைந்ததை முன்னிட்டு, கூட்டம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளது. 5 நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

28—5—1964 கருப்பட்டி கொள்முதலை நிறுத்திவைத்து, நமது சங்க மெம்பர்களும், மற்ற பொது மக்களும் பகல் 2 மணிக்கு நமது காரியாலயத்திலிருந்து நேருஜி அவர்கள் படத்துடனும், மௌன ஊர்வலமாகப் புறப்பட்டு, தென் கடற்கரைக்குப் போய் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்வதென்று, ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

27—5—1964. எஸ். கே. காமாக்ஷி நாடார்,
தலைவர்.

## நோயாளிக்கு உணவு கணக்கிடும் இயந்திரம்

★

மருத்துவமனைகளில் இருக்கும் நோயாளிகளுக்கும் இன்னும் மற்றக் கழகங்களுக்கும் உணவுக் கணக்கிட்டுச் சொல்லும் ஆற்றலை கணக்கிடும் இயந்திரங்கள் அண்மையில் காட்டியுள்ளன.

நியூ ஆர்லியன்ஸ் நகரில் இருக்கும் டுலேன் பல்கலைக் கழகத்திலுள்ள ஆராய்ச்சியாளர் குழு ஒன்று மருத்துவமனை நோயாளிகளுக்குப் பலவகை உணவுகளைக் கணக்கிட்டுக் கூற சொல்லிக் கொடுத்துள்ளது. ஒரு நோயாளிக்குக் குறைந்த செலவில், தேவையான கலோரி, ஊட்டம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு, இன்னின்ன உணவுகள் கொடுக்கவேண்டுமென்று அரை நிமிடத்தில் கூறிவிடுகிறது. ஒவ்வொரு இனத்திற்கு இவ்வளவு விலை, மொத்தச் செலவு இவ்வளவு என்பதையும் கணக்கிட்டுச் சொல்லிவிடுகிறது.

இந்தக் கணக்கிடும் இயந்திரங்களை அமெரிக்காவில் எல்லா மருத்துவமனைகளிலும் வைத்துவிட்டால், ஆண்டுக்கு ஒன்பது கோடி டாலர் மிச்சமாகும் என்று டுலேன் விஞ்ஞானிகள் கணக்கிட்டு உள்ளனர்.

Endt. D. Dis. 65039/63-VI (1)

# தணிக்கைக் கட்டணம் செலுத்துவது பற்றிய அரசின் உத்தரவு

*Copy of Government Memorandum No. 134584 Spl. BII/63-8 Industries Labour and Co-operation department, dated 23—3—1964.*

SUB: Acts aud Rules—The Madras Co-operative Societies Act VI of 1932—Rule XI of Rules framed under the Act—payment of Audit fees—Exemption to Industrial Co-operatives—clarification-Issued.

REF: G.O. Ms. No. 4618 ILC dated 14—9—1962.

From the Registrar of Co-operative Socicties, Madras No. 96519/63 LI dated 19—9—1963.

From tho Director of Industries and Commerce letter No. Rc. 192906/63 ICA dated 6—2—1964.

The Registrar of Co-operative Societies, Madras is informed that in regard to these Industrial Co-operative Societies which have on or before 14—9—1962 completed the fifth Co-operative year after the commencement of business the notification in the G.O. cited has no application as the exemption granted in that G.O. is with effect from 14—9—1962. The Societies have not been exempted, nor is there any question of refund of audit fee, if any, paid by those Societies. In the ease of Industrial Co-operative Societies which commenced business before 14—9—1962, but which have not complected the fifth Co-operative year on 14—9—1962, the exemption from payment of audit fee will be in respect of the period after 14—9—1962 until the completion of the fifth Co-operative year. Since the exemption has no retrospective operation audit fee paid by such Societies for any period prior to 14—9—1962 is not liable to be refunded.

2. The view of the Registrar of Co-operative Societies that there is however no question of refund of cost of auditors employed under F.R. 127 terms by Societies as the posts were created only under their express consent is correct.

[True Copy]

Endt Ro. No. 96519/63-LI

Office of the Registrar of
Co-operative Societies, Madras-5.
dated, 31—3—1963.

Copy communicated to all the District Co-operative Audit—Officers in continuation of Registrar's Memo No. 96519/63/-LI dated, 12—191963 for information and necessary action.

P. K. VENKATADRI,
For *Registrar.*

[True Copy]

K. Dis. 18434/64-VI (1)

State Khadi and Village Industries Boad,
Village Industries Wing,
No. 2, Desikachari Road, Madras-4,
*dated, 12—5—1964.*

Communicated to Village Industries Officers in continuation of this Office Endt. No. K. Dis. 53904/63 VI (1) dated 8—12—1963 for information.

(Sd.) T. V. RAMANUJAN,
For *Secretary.*

## பிரயாணிகள் தங்கும் விடுதிகளில் பனை நட அனுமதி

*Copy of Memo No. 63345 Wks-II-3/63-CP D/17—2—1964 from the Chief Engineer (Buildings), Madras-5 to the Executive Engineers of regular divisions.*

SUB: Palm Gur Industry—Development of Palm Gur Industry—Growing of Palmyrah Trees in the compound area of Traveller's Bungalows—Reg.

The Madras State Palm Gur Federation have proposed to plant Palmyrah trees in the vacant spaces in the compounds of Travellers Bungalow and this expected to provide additional employment to the large number of artisans employed in the Gur Industry. The Palm Gur staff of the Madras State Palm Gur Federation will render necessary assistance in the planting of the Palmyrah trees. The Executive Engineers are requested to permit the planting of palmyrah trees in the vacant plots of T.B. etc. Care should be however taken to see that the palmyrah trees are only planted along or close to the fence line and not inside the compound.

(Sd.) V. R. S. PANDIAN,
*Chief Engineer, (Buildings.)*

# பதிவான கூட்டுறவுச் சங்கங்களை துவக்குவதற்கான காலக் கெடு

*Copy of Circular No. 54762/64-CL, dated 12—4—1964 from the Registrar of Co-operative Societies, Madras-5.*

SUB: ACTS AND RULES—Madras Co-operative Societies Act, 1964—Registration of Societies—commencement of working—Instructions—Issued.

According to Section 85 (2) (b) of the Madras Co-operative Societies Act 1961, the Registrar may direct the winding up of a Society, if the Seciety has not commenced working within the prescribed period. For the purpose of this section a period of 3 months has been prescribed in Rule 6 of the Madras Co-operative Societies Rules, 1963 for the commencement of a Society from the date of its registration with provision empowering the Registrar to extend this period in deserving cases. According to the explanation under rule 6, a society will be deemed to have commenced working, if it has held the first general meeting after its registration and admitted members or allotted shares and its committee has been constituted. Since the powers of the Registrar have not been delegated to the Deputy Registrars any extension of the period specified in rule 6 of the Madras Co-operative Societies Rules, 1963, has to be granted by the Registrar only.

2. The Deputy Registrars are requested to ensure that every society registered by them commences working within the prescribed period of 3 months from the date of its registration and that if, for any reason, it is not possible to adhere to the time limit in any case, the sanction of the Registrar extending the period beyond 3 months is obtained as required in rule 6 of the Madras Co-operative Societies Rules, 1963. They are requested to specify, in the order communicating the registration of the society, the date before which the society should be started on its work and see that the provisions of rule 6 are strictly followed.

3. The Deputy Registrars are requested to bring these instructions to the notice of all the subordinates in their circles including the Extension Officers (Co-operation).